சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

**முன்னிலை: திரு.P.S. ரஸ்கின் ராஜ், B.A., L.L.B.,**

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20-ம் நாள் திங்கட்கிழமை

அசல் வழக்கு எண்.13/2025

***(CNR No.TNMD240000452025)***

சரசு ..... வாதி

/ எதிர் /

ரத்னா ..... பிரதிவாதி

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 26.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.C.பாலசந்திரன் அவர்களும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.கனிராஜன் அவர்கள் ஆஜராகி பின்னர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் அவர் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டு, வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியம், வாதங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ஒருதலைபட்ச.....

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது பிரதிவாதி, வாதிக்கு செலுத்த வேண்டிய பிராதுத் தொகையான ரூ.2,48,667/-ஐ செலுத்தக் கோரியும் மற்றும் வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தி முடிக்கும் தேதி வரை அசல் தொகை ரூ.2,00,000/-க்கு 15 சதவீத ஆண்டு வட்டியுடன்

செலுத்தக்கோரியும், பிரதிவாதி கடன் தொகையை செலுத்த தவறும் பட்சத்தில் தாவா சொத்துக்களை நீதிமன்றம் மூலம் ஏல விற்பனைக்கு உட்படுத்தி அதில் வரும் ஏல தொகையினை தீர்ப்பாணை தொகைக்கு நேர் செய்து உத்தரவிடுமாறு முதல் நிலை தீர்ப்பாணை கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1**. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு :**

*1.1.* பிரதிவாதி அவரது குடும்ப செலவுக்காகவும், சில்லரைக் கடன்களை தீர்ப்பதற்காகவும் வாதியிடம் கடந்த 18.01.2023ம் தேதி கடனாக ரூ.2,00,000/-ஐ பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக பதிவு அடமான பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி ஈடுகடனுக்கு ரூ.100-க்கு ரூ.1 வீதம் மாதந்தோறும் வட்டி கொடுப்பதாகவும் பிரதிவாதி, வாதியிடம் ஒப்புக்கொண்டார். மேற்படி ஈடுகடன் ஆவணத்தின்படி 2 வருட கால அவகாசத்திற்கு பிறகு ரூ.1.25 வீதம் வட்டி கொடுப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார். வாதி பலமுறை பிரதிவாதியிடம் கேட்டும் ஒப்புக்கொண்டபடி வட்டியினையோ, அசலையோ செலுத்தாமல் பிரதிவாதி வந்துள்ளார்கள். பிரதிவாதி தொடர்ந்து ஏமாற்றும் நோக்கத்துடன் செயல்பட்டதால் மேற்படி கடன் தொகையை வட்டியுடன் சேர்த்து பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று உத்தரவிடக்கோரி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி பின்னர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் அவர் தோன்றாத்தரப்பினராக உத்தரவு செய்யப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வ.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

*3.* வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்தில் 18.01.2023ம் தேதிய வாதிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஈடுபத்திரத்தின் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளார்.

4. பிரதிவாதி இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் அவர் தோன்றாத்தரப்பினராக உத்தரவு செய்யப் பட்டுள்ளார். பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக இருந்ததால் வாதியின் வழக்கு விபரங்களை பிரதிவாதி ஒப்புக் கொண்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே பிரதிவாதிக்கு எதிரான இந்த வழக்கு வாதி தரப்பில் நிரூபிக்கப் பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக, வாதி வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி, வாதி கோரிய பிராதுத் தொகை ரூ.2,48,667/-ஐ வாதிக்கு செலுத்தவேண்டும் என்றும், மேற்படி அசல் கடன் தொகை ரூ.2,00,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தொகை முழுவதும் செலுத்தி

முடிக்கும் தேதி வரை 12% வட்டி வாதிக்கு செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு பிரதிவாதி செலுத்த தவறினால் தாவா சொத்தை நீதிமன்றம் மூலம் ஏல விற்பனை செய்து அதில் கிடைக்கும் தொகையை வாதிக்கு ஈடு செய்ய வேண்டும் என வாதி கோரியவாறு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.04.20 15:25:28 +0530

சார்பு நீதிபதி
உசிலம்பட்டி.

**வாதி தரப்பு சாட்சி:**

வா.சா.1 சரசு

**வாதி தரப்பு சான்றாவணம்:**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 18.01.2023 | வாதிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஈடு பத்திரத்தின் அசல் |

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.04.20 15:25:41 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.